உ

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் உஉ	விய—மாசி, பங்குனி 1947—பிப்ரவரி, மார்ச்சு	மலர் ௰க, ௰உ

உயிரின் ஊதியம்.

(K. சோமசுந்தரம் பிள்ளை B. A., B. L. தஞ்சை)

வையத்தே ஊனுடம்பொடு கலந்து தோன்றும் உயிர்த் தொகையுட் சிறந்ததாகக் கருதப்படும் மக்கட் பிறவி யெய்தினா ரனைவரும், உறுதிப் பொருளென உணர்த் தப்பெறும் அறமுதனாற் பொருளை ஐயந்திரிபற ஆய்ந் துணர்ந்து, பெறுவதும் உறுவதும் கருத்துற இருத்தி உறுதி யெய்துங் கடப்பா டுடையார். மெய்யிது பொய் யிது வெனப் பகுத்தறிய வல்ல மனவுணர்ச்சி, பிறவுயிர்கள் மாட்டுக் காணப்படாது மக்களுயிர்க்கு வாய்ந் திருந்தும் மெய்யறித லில்லாவழி, மனவுணர்வு இருந்தும் இல்லை யென்றே கருதுப. அஃதில்லையென நன்கறியப்படவே, மனவுணர்வுக்கு இன்றியமையாது உதவியாகவுள்ள ஐம் புலனறிவும் பயன்படு மாறில்லை யென்ற உண்மை உய்த் துணர வல்லார்க்குப் புலனாகாமற் போகாது. எனவே வாழ்க்கையின் நோக்கம் மெய்யுணர்வு கைவரப் பெறுத லென்பதும், ஐம்புலன்களை அடக்கி அவற்றான் அறியப் படுவன யாவும் அறிந்தாலும் மெய்யுணர் வின்றேல் பய னின்றா மென்பதும் துணிதல் வேண்டும். ஆகவே மக்கள் தோன்றித் தோன்றி மறைதற் கிடனாய இஞ்ஞால மென் னும் பெரும் பாட்டையில் வந்த வழிப்போக்கர்களான மக்களுயிர், நாளும் காணும் தோற்ற மெல்லாம் மாற்ற மாதலான், மெய்ப் புகழுக் கேதுவாகிய கடமைகளை வழு வாமல் மகிழ்ந்து நிறைவேற்றி; அறிவால் முகந்த மெய்ப் பொருள்களை நுகர்ந்து அறியாமையினையும், துன்பத்தினையு மகற்றி, பிறவி யாலாம் பயனாகிய பேரின்ப முற்றிருத்தல் மக்களெல் லோருக்கு முரிய சீரிய கடனாகு மென்க.

மக்கள் வாழ்வு மறை பொருளாதலான், பாரில் மாந்த ராய்ப் பிறந்து, நேர்ந்து செய்தற் கொத்த பேரறம் யாதென அறிந்து புரிபவன், உயிர் வாழ்பவனுவன். இங் ஙனம் வாழ்வின் பயனை யுணர்ந்து, தன்னுயிரைப் போலப் பிறவுயிர்களையும் கருதிப் பேணுதலும், தந்நலம் தவிர்த்துப் பெற்றது கொண்டு தன்னுலியன்ற அளவு மனமொழி மெய்களான் பிறர்க்குதவி செய்து புகழினை நிறுவி இவ்வுலக வாழ்வினிலே தெய்வத் தன்மை பெறுவது நன்மக்கட் குரிய மாண்புடை வழியாகும். இவ்வுலகம் வண்மைக் கோர் வைப்பாக விளங்குவார் போன்ருரால் இயங்குகின் றது. மற்றும் நிலைத்து நிற்கும் பெற்றிமையு முடைத்து. இப்பெற்றி

உண்டா லம்மயிவ் வுலக மிந்திர
ரமிழ்த மியைவ தாயினு மினிதெனத்
தமிய ருண்டலு மிலரே முனிவிலர்
துஞ்சலு மிலர்பிற ரஞ்சுவ தஞ்சிப்
புகழெனி னுயிருங் கொடுக்குவர் பழியெனி
னுலகுடன் பெறினுங் கொள்ளல ரயர்வில
ரன்ன மாட்சி யனைய ராகித்
தமக்கென முயலா நோன்ருட்
பிறர்க்கென முயலுந ருண்மை யானே

என்ற செவ் வறிவுப் புறப்பாவில் இளம் பெரும் வழுதி ஆணை யிட் டருளினதினுற் புலப்படுதல் காண்க.

ஒருவர் எத்தகைய பொருளின்ப முடைமையா யிருந்த போதிலும், அவர் பிறரது உதவி யில்லா விடத்து உலகில் வாழ்வாங்கு வாழ்ந்து இன்புறுவது அருமையாகும். வாழ்க்கையானது மக்கள் பலர் கூடி அளவளாவிக் கொள் ளும் நேய வாழ்வினிலிருந்து நயத் தக்க நாகரீகப் பொலி வும், வளர்ச்சியுமுறுகின்றது. எனவே, தனக்குரிய அறமறி யாதும் தக்கார்க்கு ஈந்துத வாதும் தன்னலம் பேணுவார் பால் உயிருக் கொத்த அறிவுடைமை காணப்படாமையால், அன்னுர் செத்தாருள் வைத்தெண்ணப்படுவரென்று திருவள் ளுவர்

ஒத்த தறிவா னுயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்

எனக் கூறியது ஈண்டறியத் தக்கது. உலக நடையறியா னது நயனும் தகைமையும் அவ னுர்வுற்று ஈயா தீட்டிய

பொருள் போற் பரந்து வெளிப்படாது ஒழிந்துபடு மாதலான், அன்னனைச் செத்தவருள்ளே ஒருவனாகக் கருதப் படுவது உலக நடை இடையூறு படாமற் பொருட் டென்க. ஒப்புர வென்னுங் கடப்பாடு பற்றி 'வறியார்க் கொன் றீவதே யீகை' யென ஈகையின் நன்மையினை மொழிந்த இடத்தில், தெய்வத் திருவள்ளுவர், கொளல் தீதாலே 'நல்லா றெனினுங் கொளறீது மேலுலக, மில்லெ னினு மீதலே நன்று' என்று குறித்ததின் நோக்கம் ஆராயற் பாலது. இரத்தலும் ஈதலும் உலகியல்பாதலான், ஈவார் கண் இரப்பவர் வருதல் இழிவெனக் கூறலமையாது. அகன்ற இவ்வுலகில் இரப்பா ரில்லாராயின் ஈந்து புக ழெய்துவார் இலராவர். 'இன்மை யிடும்பை யிரந்துதீர் வாமென்னும், வன்மையின் வன்பாட்டதில்' என்றதினுன் வறுமைப் பிணியினைப் போக்குவது இரவன்றென தெளிந்த ஞான்று, இரந்து பிழைத்தலும் மகிழ்வற்ற செய லாகும். மற்றும் இழிவுமாகும். ஈவார்பால் வறியார் சென்று பொருளை இரப்பின், அஃது அவரிடத்தே யில்லை யாயின் அவரடையும் துன்பத்திற்கு அளவின்று. மண் ணோர் வாழ்க்கையில் ஒருவருக்கு இறத்தலைப் போன்று இன்னல் புரிவது பிறிதின்று. இரந்து வந்தார்க்கு கொடுத் தல் இயலாத விடத்து, அவ்விறத்தல் அவனுக்கு இனிதாம். 'சாதலி னின்னாத தில்லை யினிததூஉ, மீத லியையாக் கடை', என்பது பொய்யாமொழி. எனவே, இறத்தலைவிட, பொருளில்லாமை துன்பத்திற் கிடமாகிப் பெருந் துன்பத் தையே விளைவிக்கின்றது. இரப்பவன், பொறுத்தற் கரி தாகிய இத்தகைய பெருந்துன்பங்களை விளைவிப்பதினாலும், அவன் மானத்தை அறவே விட்டொழித்தலானும் அவனால் மடியும் மடமையும் கவறும் முதலாய இழிகுணங்கள் தோன்றி வளர்தற்குத் தக ஏது இருத்தலானும், பிறர் முன்னே நின்று இரத்தல் இழிவு. இரத்தலின் இழிவினை யும் ஈதலின் உயர் சிறப்பினையும்,

'ஈயென இரத்தல் இழிந்தன்று அதனெதிர்
ஈயே னென்றல் அதனினும் இழிந்தன்று
கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதனெதிர்
கொள்ளே னென்றல் அதனினும் உயர்ந்தன்று'

என்ற அடிகள் தெற்றெனத் தெளிவுறுத்தல் காண்க. இரந்து செல்லும் நிரப்பிடும்பை யுடையார் பிறன் கடை

சென்று நிற்றலை யன்றி பிறிதொரு நிலைக்களன் காணுதாராதலால், பிறன் கடைச் செல்லலை வறுமையென்றும், அவ்வாறு செல்லாமையே செல்வமென்றும் தமிழ்ச் சான்ருேர் கருதி யிருந்தமை 'பிறன்கடை செலாஅச் செல்வம்' என்ற அக நானூற்றின் அரிய தொடரா னறியப்படும்.

இரத்தற்கு அஞ்சாமை மாண்பின்மையேயாம். இரத்தல், வாங்குதல் என இயம்புதல் தமிழ் மரபாயிற்று. உயர்ந்தோர் மாட்டு கையினைத் தாழ்த்தி, தலையை வளைத்து வாங்கிக் கொளல், வாங்குதலாம். இகழ்ச்சிக் குரியதாக நிற்கும் வாங்குதல் எனும் சொல் 'வணங்குதல்' என்பதன் மரூஉ என்பதும், 'வணங்குதல்' வளைதலின்மரூஉ என்பதும் குறிக்கற் பாற்று. இரப்பார் உளங் குன்றுதல் இயற்கையாதலான், கொடுப்பார்முன் இளிவந்த இரவினை மேற்கொள்ளுபவர் கையை இறக்கி இழிந்து நிற்றலை, நாகரீக வொழுகலாறுகளிற் றலைசிறந்த நம் தமிழ் முன்னோர், இகழ்ச்சியின்பாலாக்கி வைத்தமை ஆயின், தமிழ்ச் சொற்றெருகுதி இயற்கையை உள்ளவாறு விளங்க அறிதல் முகத்தானே எழுந்த தென்பது சிறந்து தோன்றும். பிறர்பாற் சென்று இரத்தலைத் தவிர்க்க வேண்டுமென்று கூறவந்த வள்ளுவப்பெரியார் இல்லென இரந்துவந்தார்க்கு ஈதல்யாவருக்கும் உரித் தென வற்புறுத்தினமையான் செல்வரும் செல்வரல்லாரும் கொள்வோ ரமைதி யறிந்து தத் தமக்குத் தக கொடுக்கவேண்டு மென்பதைக் குறிக் கோளாகக் கொளல் வேண்டு மென அறியப் பெறும். இக் கருத்தானே பவமறுக்கும் சான்ருேரான சிவப்பிரகாச அடிகள்,

'என்று முகமன் இயம்பாதவர் கண்ணும்
சென்று பொருள்கொடுப்பர் தீதற்ருேர்—துன்றுசுவை
பூவிற் பொலிகுழலாய் பூங்கை புகழவோ
நாவிற் குதவு நயந்து

என்றருளிச் செய்வாராயினர்.

ஒல்காப் பெருமைத் தொல்காப்பியமெனும் திப்பிய நூலுளே

'கல்வி தறுகண் இசைமை கொடையெனச்
சொல்லப்பட்ட பெருமித நான்கே'

என மக்கட்கு பெருமிதத்தை தருவனவாகிய நான்கும் குறிக்கப் பட்டிருக்கின்றது. 'வடுவிலா வையத்து மன்னிய

மூன்றின், நடுவண(து) எய்த இருதலையும் எய்தும்' என்ற படி அறஞ் செய்து புகழ்பட வாழ்தற்குப் பொருட்டா யிருப்பது பொருள் என்று மக்கள் கூறுவர். இஃது ஒரு புடை உண்மையே யாயினும், மக்கள் மிளிர்வதற்குக் காரணமாகின கல்வி, ஆண்மை, இசைமை, கொடை என்பன மறுக்க வொண்ணாதன. இசைபட வாழ்தற்கு இவை தலைசிறந்த காரணமாயிருப்பினும், கல்வியும் ஆண்மையும், பசி வந்திடப் பறந்துபோம். இதுபற்றியே அரிய முழுமுதலறிவினரான, மணிமேகலை ஆசிரியரும் 'குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும், பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉ, நாணணி களையு மாணெழில் சிதைக்கும், பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும், பசிப்பிணி யென்னும் பாவி' என்றருளுவாராயினர். சிறந்த தங் கல்வியையும் பேராண்மையையும் மாய்க்கவல்ல பசி யென்னும் தீப்பிணியைத் தீர்க்க வல்லது கொடையா லீட்டிய புகழின் உயிராம் ஈகை யென்பதூம், ஈகைப் பயன் என்றும் அழியா தென்பதூம் அறியற் பாற்று. 'சீருடைச் செல்வர் சிறுதுனிமாரி, வறங்கூர்ந் தனைய துடைத்து' என்பது பொது மறை. ஈந்தாற் பொருள் குறையு மென் றெண்ணி பிறர்க் கியாது தாமே தமியரா யிருந்துண்ணல் இரத்தலினும் இழிவு. பகுத்துண்ணப் பொருளு மழியாது பசியும் வாராது; பசிநோயில்லையேல், வெகுளிநோயும் வேட்கை நோயுமில்லை காம வேட்கையில்லையேல், வாத முதலாய மூவகை நோய்களா லுளதாகும் மரண நோயு மின்று: மரண நோயில்லையேல் பிறவி நோயுமில்லை. இதனை வற்புறுத்துவான் வேண்டியே, வள்ளுவப் பெருந்தகை மக்களுக்கு ஈகை ஏற்றதென்று கூறி பசி தீர்த்தலையே உயிர்க்குரிய சிறப்பியல்பென

(க) அற்றா ர்ழிபசிதீர்த்த லஃதொருவன்
பெற்றான் பொருள் வைப்புழி.

(உ) ஆற்றுவா ராற்றல் பசியாற்ற லப்பசியை
மாற்றுவா ராற்றலிற் பின்.

(ங) பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந்
தீப்பிணி தீண்ட லரிது.

(ச) பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்ச லெஞ்ஞான்று மில்.

என அறிவுறுத்துவாராயினர். மற்றும்,

'தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்று
லம்மா அரிவை முயக்கு'

என்ற குறட்பாவில் நாயனர் தம்மிடத்திலிருந்து முறைப் பட இல்லறம் நடத்தி, தாளாண்மையா லீட்டிய பொருளைப் பலருக்கும் பயன்படப் பகுத்துண்ணும் இன்பம் போலுள் ளது அரிவையர்தம் முயக்கம் என வேற்றுமையற அருளிச் செய்தது, தமிழ் நயந் தெளிவார்க்கு மிக்க மகிழ்ச்சி யூட்டுவ தாகும். எனவே இத்தகைய இல்லற வாழ்க்கையின் அடிப்படையைக் கைக்கொண்டு இல்லறத்தினைச் செவ் விதே நடத்துபவர் இவ்வுலகில் நிகழ்ந்து இறவாது நிற்கும் நற்புகழெய்துவ ரென்பது திண்ணம்.

உலகம் உரைப்ப தெல்லாம் புகழானதினுன், பன் னெறியானும், நில்லா வுலகத்தே இணையின்றாக உயர்ந்து நிற்பது புகழே யென்பது 'ஒன்ரு வுலகத் துயர்ந்த புகழல் லாற், பொன்ருது நிற்பதொன் றில்' என்ற வெண் குறளால் அறியப்படும். மற்றும் 'இமையத்துக் கோடுயர்ந்தன்ன தம்மிசை நட்டு, தீதில் யாக்கையொடு மாய்தல் தவத் தலையே' (புறம்) என்ற அடிகள் இவண் நினைக்கற் பாலனவே. இவ்வணம் ஒருதலையாகப் பொன்ருது நிற்பது புக ழாதலான், தம்மாற் பெறப்பட்டு தமக்குப் பின்னர் எஞ்சி விளங்கி நிற்கும் புகழை எச்சமென்ருர், மெய்யறிவு சான்ற வள்ளுவனர். 'வினைபகை யென்றிரண்டி னெச்ச நினை யுங்காற், றீயெச்சம் போலத் தெறும்;' 'அச்சமே கீழ்கள தாசார மெச்ச, மவாவுண்டே லுண்டாஞ் சிறிது' என்ற திருவள்ளுவப் பயன்களில் எச்சமென்பது எஞ்சி நிற்ப தெனப் பொருள்படுதல் காண்க. தான் இறப்புழி எஞ்சி நிற்போர் மக்களெனக் கொண்டு, மக்களை எச்சமெனக் கூறல் ஏற்குமாறில்லை யென்பது காணப்படும். காண வல்லார் கொள்க. மாநிலத்து மக்களெல்லாம் மக்கட் பேறு பெறுவதில்லை. ஒருவர் ஈட்டும் புகழொன்றே, அவர் செவ்வையுடையா ரென்ற தன்மையினையும், செவ்வையில ரென்ற தன்மையினையும் நீட்டியளப்பதோர் கோலாகும். எனவே செவ்வை யுடையாரை அவரது புகழென்ற எச்சம் அறிவிக்குமாதலான் எச்ச மென்பது பொன்ருது எஞ்சி நிற்கும் மெய்ப் புகழேயாகும். அறிவறிந்த மக்களைப் பெறு தலும் உடைத்தாயிருத்தலும் வாழ்க்கைத் துணைக்குத்தக்க தோர் அணிகலமென்றும், பெற்ருேர்க்குரிய பொருள் தம்

மக்களே யென்றும், வள்ளுவர் கூறினரே யொழிய, 'மக்கட் பேறு' என்ற அதிகாரத்தின்கண், மக்களை எச்சமென்று குறிப்பானும் யாண்டும் கூறவில்லை யாதலான், பொன்று மியல்பினராய மக்களை எச்ச மெனல் பெரிதும் இடரும் ஐயப்பாடும் விளைவிக்கும் கூற்றேயா மென்பது இனிது விளங்கா நிற்கும். மற்றும் மக்கட்பேறின்றி பல் கேள்வித் துறைபோகிய தொல்லாணைப் புலவர்கள் அவரவர்களியற்றிய நூல்களானும் இன்பமான புகழ்கொண்டு எழிலெய்தினர். இஃதோ டமையாது அறவழி நின்று அரசவை யமைத்து முறைவழி ஆட்சி செய்துவந்த வேந்தரும் வேளிரும் கொடையானும், வீரத்தானும், புலமையானும் மக்கட் பேறின்றியே உரைசால் வண்புகழடைந்ததும், அவர்களது வாழ்க்கை நலன்களை எடுத்துக் காட்டும் பண்டைத் தமிழ் நூல்களிலேயே பரக்கக் கண்டுணரற் பாலன. ஆகவே தெய்வப் புலமைத் திருவள்ளுவரது கருத்து ஆயுமிடத்து 'எச்சமென் றெண்ணுங்கொல்லோ வொருவரா, னச்சப் படாஅ தவன்' என்ற விடத்தும், 'வசையென்ப வையத்தார்க் கெல்லா மிசையென்னு, மெச்சம் பெறாஅ விடின்' என்புழியும் புகழையே எச்சமெனக் கொண்டு கூறினரென்பது ஐயமின்றி அறியலாகும். மற்றும் இக் கருத்தினைக் கொண்டு

(க) செப்ப முடையா னாக்கஞ் சிதைவின்றி
யெச்சத்திற் கேமாப் புடைத்து.

(உ) தக்கார் தகவில ரென்ப தவரவ
ரெச்சத்தாற் காணப் படும்.

(ங) மனந்தூயார்க் கெச்சநன் றாகுமினந் தூயார்க்
கில்லைநன் றாகா வினை.

என்ற பொய்யில் பொருளுரைகளை நோக்குழி எச்ச மென்பது பொன்று மியல்பினராய மக்களைக் குறிக்காதெனத் தெளியப்படும். முதற் குறளில், நடுவு நிலைமை செல்வத்தைச் சிதைவின்றிக் காத்துப் புகழினை நிலைக்கச் செய்யு மென்றும், அதற்கடுத்த குறளில், தக்கார் தகவில ரென்பது அவரவர் புகழுண்மையானும், இன்மையானும் அறியப் படுமென்றும், இறுதிக் குறளின்கண் மனந்தூயார்க்குப் பின் நிற்கும் புகழ் நல்லவா மென்றும் குறிப்பாக அறிவுறுத்தப்பட்டதாகக் கொள்க. பெரும் புகழை ஈட்டும்

செவ்வையுடையார்க்கும் மனந் தூயவர்க்கும், மிக்க மாறுபாடு தோன்றும் மக்கள் பிறப்பது இடமகன்ற உலகில் கண்கூடாகக் காணக் கிடைக்கும் காட்சியாகும். மற்றும் இத்தகைய தக்காரும், மன நல்லாரும் மக்கட்பேறின்றி மாயாப் புகழ் பெற்றமையும் எளிய வகையானே தெளியப் படுதலின் எச்சமென்பது மக்களுயிரின் ஊதியமாய்ப் புகழைக் குறிக்குமென்பது தேற்றம்.

புகழின் உயிராகிய ஈகை இரந்து வந்தார்க்கு ஏந்து கை நிறைய விரும்பிய தொன்றைக் கொடுத்துப் புரத்தலென்பதும், அக்கொடையா னல்லது மக்களுயிர்க்குப் பயனிலை யென்பதும் அறிந்திருந்தும், உயிரின் ஊதியமாய புகழும் பெருமையும் கெட மக்கள் ஒழுகுவது அடாது. மற்றும் இசை, நல்லிசைக்குக்கண்ணும். விருந்திருக்க வுண்ணுத வேளாண்டகைமையினைப் புறக்கணித் திடுதலும் சாலாது.

நற்குணப் பழக்கத்திற்கு இசைந்ததான புகழுடையோர் அரும்பெறல் உலகடைதலை

'புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவ னேவா வான வூர்தி
யெய்துப வென்பதஞ் செய்வினை முடித்து'

எனவரும் புலவர்கள் காமுறும் புறப்பாட்டான் ஒருவாறுணர்க. இத்தகைய புகழ், உரனென்னும் தோட்டியான் ஓரைந்துங் காத்து உள்ளத் துண்மை யுணர்ந்து, வறியார்க் கொன்றீந்து வறியராவதைத் தமக்கு ஆக்கமாகவும், இறத்தலை இருப்பாகக் கருதிக் கொள்ளும் அறிவுடையார்க்கே எளிதில் கிடைக்கும். வறுமையுரினும், உயிரின் ஊதியமாய புகழை வளர்த்தலும், உயிர்நிலை துறந்து புகழை நிலை பெறச் செய்தலும் வித்தக மேலோர்க் கின்றி பிறருக்கியலாது. இதனை,

'நத்தம்போற் கேடும், உளதாகும் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது'

எனப்படும் செழுந் தமிழ்த் திருமறையான் அறியலாகும். மற்றும் பூதவுடல் அறத்தோடு ஈட்டியதைக் கொண்டு கொடுத்தலாற் வறுமையுறினும், புகழுடல் குறையாது தழைக்கும் செல்வமுறுதலின் கேடு நத்தமாயிற் றென்பதும் பூதவுடல் துஞ்சினும் புகழுடல் நிலைபெறுதலின் சாக்காடு உளதாயிற் றென்பதும் பெறக் கிடக்கின்றது.

(320-ஆம் பக்கம் பார்க்க)

குயத் தொழிலும் பொருணுவலேயும்
(POTTERY AND PHYSICS)

(த. பு. நவநீதகிருட்டினன், அண்ணுமலைநகர்)

(முற்றொடர்ச்சி: துணர் உஉ, மலர் ம, பக்கம் 292)

கறங்குத் தகையி னளவு களிமண் உட்படுகிற முடுகியல் வலிமைக்குத் தக்கவாறு இருப்பது. எனவே, கம்பித் திருகலின் கோணத்தை அளவிடலால், முடுகியல் முரணீட்டின் அளவைக் கணக்கிடலாம். இவ்வாறுன சோதனையின்போது, களிமண் ணடர்பானது எளிய சரிவுக்குட்படுவது. களிமண் பிழம்பின் உட்பக்கம் நிலையா யிருத்தப்பட்டிருக்க, வெளிப்புறப் பரப் பானது அப் பரப்பு அமைந்த இடவையிலேயே நகர்த்தப் படுகிறது. பாண்டங்கள் குயிற்றப்படும்போது, அவற்றின் மீது அவ்வாறுன சரிவுத் திறமே யன்றி, இன்னும் பல வகையான சரிவு தரு மிடல்களும் உறுத்தப்படுவன. ஆயினும், பொருணு வலேயின் வாயிலால் எளிய சரிவைப் பொறுத்த செய்திகள் பல அறியப்பட்டுள. வேறு பல வகையான சரிவு மிடல்களேப் பொறுத்த விளைவுகளையும், தக்க வாறுன மாற்றத் தொடர்பு முறைகளைக்கொண்டு, எளிய சரிவு வகையினவற்றுலானவாறுய்ப் பகுத்துக் காணலாம். ஆகவே, எளிய சரிவின்பாற்பட்ட செய்திகளை அறிந்துகொள்கையினல், பலவாறுன சரிவுகளைப் பொறுத்த தெரிவையும் அடையலாகும். களிமண்ணுனது மிடலுறுத்தப்படலைப் பொறுத்த விளைவுகளைத் தக்கவாறு அளவிடற்கான கருவியினது அடிப்படைத் தகவுகளைப் பற்றிக் கூறினேன். அம் முறையை யொட்டிய செயலாற்றுக் கருவியைக் குறித்த விரிவான செய்திகளை உரைக்காமல் விட்டுவிடுகிறேன். ஆனல், அவ்வாறுன கருவிகளைக் கொண்டு செவ்வைத்திருத்த மாய் அளவிடப்பட்டவாறு திரட்டப்பட்டுள்ள செய்திகளில் முக்கியமான சிலவற்றைக் கூறல் தக்கதே எனக் கருதுகிறேன்.

வீசம் பங்கு மண்ணுனது முக்காலே மூன்று வீசம் பங்கான தண்ணீரில் கரைக்கப்பட்டவாறுன சேற்றுக் குழம்பினின்று முக்காற் பங்கு மண்ணுடன் காற் பங்கு தண்ணீர் கலக்கப்பட்ட படியான களிமண் வரை, படிப்படியாய் வேறுபட்டுவந்த

குழைகள் சோதனை செய்யப்பட்டன. நீர் மிக்க குழம்பு வகையினவை, தண்ணீர், நெய், இன்னோ ரன்ன பாறுவிகளை (Fluids) யொத்த தன்மைகளில் சிலவற்றைக் கொண்டுள எனக் காணப்பட்டது. அதாவது, அவை, பாறுவிகளைப் போன்று சிறிதளவான சரிவுறுத்து மிடலுக்குட்பட்டபோதும் சரிந் தோடும் தன்மையினவா யிருந்தன. பாறுவியின் பகுதிகளிடை உரச லுண்டாதலை யொட்டி, அதன் ஓட்டப்போக்கு சிறிது வரை தகைக்கப்படுகிறது. அங்ஙனம் தடையிடும் வலிமையி னளவு பாறுபவிக்குப் பாறுவி வேறுபடுவது. அதனாலேயே பாறுவிகளின் ஓட்ட விரைவினளவுகள் வேற்றுமையா யிருப்பன. நீர் விரைவாய் ஓடும்; ஆமணக்கு எண்ணெய் மெல்லெனவே நகர்கிறது. பாறுவி யியக்க விரைவைப் பொறுத்த அங்ஙனமான தன்மைக்குப் பாகு நீர்மை (viscosity) என்று பெயர். பாகு நீர்மை பாறுவிப் பாங்கானது, திணிப் பொருள்கள் (solids) அவ்விய லுடையன வல்ல. நீர் மிக்க சேற்று குழம்புகள் பாகு நீர்மை வாய்ந்துள. ஆனால், அவற்றை யொட்டிய பாகு நீர்மைக்கும் பாறுவிகள் பாற்பட்டனவற்றினுக்கும் முக்கியமான தொரு வேற்றுமை யுள்ளது. சரிவு வலிமையி னளவு மாற்றத்தை யொட்டிப் பாறுவிகளது பாகு நீர்மையி னளவு வேறுபடுவதில்லை. சேற்றுக் குழம்பின் பாகு நீர்மையி னளவு சரிவு வலிமையின் வேற்றுமைகளை யொட்டி வேறுபடுவது; அவ்வாறான வலிமையி னளவு மிக மிக, பாகு நீர்மையி னளவு குறைந்துவர லாகும். அடுத்தபடியாக, மிதப்பதனான குழைகளைப் பற்றி அறியப்பட்ட செய்திகளைக் கூறுவோம். அவை நீர் மிக்கனவா யில; ஆனால், நீர் குன்றினவையு மல்ல. அவை, திணிப் பொருளுக்கும் பாறுவிக்கும் இடைப்பட்ட தன்மையின. சரிவுறுத்து மிட லானது குறித்ததோ ரளவைவிடக் குறைந் துள்ள போது, அவ்வாறான திணியணவுக் குழை (Semi-solid Paste) திணிப் பொருளின் தன்மையினதா யிருப்பது. அதாவது, அது சரிவுறுத்து வலிமையை எதிர்க்க வொல்லாவாறு சரிந் தோடிவிடாமல், அவ்வாறான வலிமையை யொட்டிய தெற்றல் கள் காணலாவது. சரிவுறுத்துமிடலி னளவு குறித்த வளவை விட மிக்கதாயானபோது, குழையானது, பாறுவித் தன்மையைக் காட்டுகிறது. அங்ஙனம் குழையின் பாறுவி யியலுக்கும், திணி யியலுக்கு மிடைவரம்பு கோலுகிற வளவான மிடலுக்கு,

வரைப்படி மிடல் (Critical Stress) என்று பெயர். வரைப்படி மிடலி னளவு, குழையி லமைந்த மண்ணுக்கும் நீருக்கு மான பங்கு வீதம் வேறு படலை யொட்டி வேறுபடுவது. மண்ணனது காற் பங்கு நீரானது முக்காற் பங்கு என்றவா றுள்ள குழையை யொட்டிய வரைப்படி மிடலானது சூன்னமாம். அதாவது, அவ்வாறன பங்கு வீதம் அடையும் வரை, குழையானது பாறுவி யொத்த பாங்குற்றதா யிருப்பது. மண்-மூன்றி லொரு பங்கு, நீர் - மூன்றிலிரண்டு பங்கு, என வமைந்த குழையைப் பொறுத்த வரைப்படி யான மிடல், 10 ஒன்றனைகள் (units) மண்ணனது நூற்றில் முப்பத்தெட்டு பங்காகவும், நீரானது நூற் நூற்றில் அறுபத்திரண்டு பங்காகவும் அமைந்த குழையை யொட்டிய வரைப்படி யான மிடல் 17 ஒன்றனைகள். மண்ணின் வீதமானது நூற்றில் நாற்பத்தொன் றுகவும், நீரின் வீதமானது நூற்றில் ஐம்பத்து ஒன்பதாகவும் ஆனபோது, வரைப்படி மிடல், 47 ஒன்றனைகளாம். மண் - 44%, நீர் - 56% என்றுன தற்கு, மிடலி னளவை, 115 ஒன்றனைகள். மண் - 47%, நீர் - 53% என்றுனபோது, மிடல் 150 ஒன்றனைகள் என ஏறுகிறது. இங்ஙனம், நீரின் வீதமானது குறைந்தும், மண்ணின் வீதமானது மிகுந்தும் போகப் போக, வரைப்படி மிடலின் அளவு மிக்கதாகிச் செல்வது. நீரின் வீதம், நூற்றில் முப்பது என்றதைவிடக் குறைந்தபோது, எத்துணை மிக்க மிடலை யொட்டியும், பாறுவி யியலான நிலைமையை, அக்குழையானது அடைவதில்லை. அதன் பிறகு, அது, திணி யியலினதாகவே யிருப்பதாம். ஆகவே, சரிவு மிட லுறுத்தப்பட்ட களிமண் குழையானது, அதனி லமைந்த மண்ணுக்கும் நீருக்கு மான பங்கு வீதத்தின் வேறுபாட்டைப் பொறுத்தவாறு மூவகையான விளைவுகளைக் கொண்டிருப்பது, என அறிகிறோம். அவையாவன : (1) திணிப்பொருளியலான முரணிடு எதிர்ப் புடைமை (2) வரைப்படியளவான தற்குக் குறைந்த மிட லுறுத்தப்பட்டபோது, திணிப் பாங்கான முரணிடு எதிர்ப்பையும், அவ்வரை கடந்த மிடலுக் குட்பட்டபோது, பாறுவித் தகவான பாகு நீர்மையுற்று, ஓட்டத்தையும் கொண்டிருத்தல் (3) பாறுவி யொத்தவாறு பாகு நீர்மை யுற்று, சரிவு மிடலி னளவை யொட்டி அப் பாகு நீர்மையி னளவு வேறுபட்டு வருமாறு யிருத்தல். அவ்வாறன விளைவுகளைப் பொறுத்து செவ்வைத் திருத்தமான அளவை யெண்கள் அறியப்

படலால் களிமண்ணைக் கொண்டு பாண்டம் அமைத்தலை யொட்டி பெருந் துணை பெறப்படுகிறது.

களிமண் ணுருட்டலின் பாற் பட்ட திரிபுத் தகவுகளும் உருவாக்கப்பட்ட வாறும் அக் களிமண் சூளையில் சுடப்படும் போது அதில் ஏற்படும் மாற்றத் தகவுகளும், மண் துகள்களது பருமனளவைகளைப் பொறுத்தவாறு எவ்வண்ணமாய் உறுத் தப் படுவன என்பதைக் காணற்கான ஆராய்ச்சிகள் செய்யப் பட்டு வருகின்றன. பொதுவாக, மிக நொய்யான துகள்களைக் கொண்ட குழைகள், உரமும் (Rigidity) ஒட்டு நசையும் (Cohesion) மிக்கனவா யிருப்பன. ஆதலால், அவை, உரு வமைத் தற்குத் தக்கவை. இத் தகைத் தெரிவு குயத் தொழிலை யொட்டிய நீண்ட அனுபவத்தின் வாயிலாய்ப் பெறப்பட்டது. மண் துகள்களைச் செவ்வைத் திருத்தமாய் அளவை செய்தற் கான வழிகள் இப்போது அறியப்பட்டுள்ளமையின், துகளிகளி னளவுக்கும் களிமண் தகவுக்கு மான தொடர்புகள் எண் ணளவைப் படியானவாறு இனித் தெரிந்துகொள்ள லாகும் என எதிர்பார்க்கலாம்.

ஈரக் களிமண்ணால் அமைக்கப்பட்ட பாண்ட வுருவங்கள் காய வைக்கப்பட்டுச் சூளையில் சுடப்படும் நிரல்களை யொட்டிய பொருணுவணைச் செய்திகள் பல வுள. ஆனால், அவை இதுகாறும் திண்ணமாய் அறியப்பட வில்லை. செவ்வைத் திருத்தமான வெப்ப நிலை யளவிகள் வாய்ந்திருப்பினும், சூளைகளின் வெப்ப நிலையைச் சீராய் வைத்திருத்தற் கான செயல் முறைகள் தெரிந்தில. அவ் வழிகள் அறியப்பட்டுச் சூளையின் வெப்ப நிலை தக்க சீரா யிருக்கும்படி அமைக்கப்படினும், களிமண் ணுருவத்தின் பகுதிகள் எல்லாம் ஒரே சீரளவான சூடுறைக்கப் பட்டவாறு யிருப்பன என்ற தெற்றம் இருக்காது. உருவத்தின் வெளிப் பரப்பினின்று நீர் ஆவி யாகிறது; உட்பக்கத்தினின்று வெளிப்புறத்திற்கு நீர் விரவுகிறது. ஆதலால், வெளி மருங்கி லான பகுதிகள் உட்பக்கத்தி லானவற்றைவிட மிக்க வளவுக்குச் சுருங்குவன; தெற்றல்கள் ஏற்படுவன. ஆதலால், உருவில் வெடிப்புக்கள் தோன்றுகின்றன. அவ்வாறுய் நேரிடாம லிருத்தற் கான வழி, களிமண் ணுருவங்கள் பையப்பைய உலர்ந்துவரும்படிச் செய்தலே. ஆனால், அங்ஙனம் செய்தலை யொட்டி, பாண்ட மொன்று பண்ணி முடிக்கப்பட்ட பண்பி னதாய் ஆதற்கு நெடும் பொழுதாகும். ஆதலால், தொழிலை யொட்டிக், குறித்த காலத்தினுள் பெறப்படும் வரும்படி குறைந்து போகிறது. குறும் பொழுதுக்கே காய்ந்தவா றுன பாண்டங்களைச் சுடும்போது அவற்றில் பிளவுகள் காணுவாறு அமைத்தற் கான வழி, நீராவி யேற்று மிகுந்த காற்று சூழ்ந்த

நிலைமையில் அவை வெந்து வருமாறு செய்தல் என்பதே. அந் நிலைமையி லானபோது, பாண்டத்தின் உட் பகுதிகளினின்று வெளி நோக்கினவாறு நீரானது விரவலுக்குத் தக்கபடி, வெளிப் பரப்பினின்று நீரானது மெல்லென ஆவி யாகிப் போகும்படி யாகும். சூளையின் சூடானது வெவ்வே றளவுகளுக்குப் பாண்டத்தின் பகுதிகளில் உறைத்தலை யொட்டியும், அதனிற் பிளவுகள் தோன்றுவன. ஆதலால், பாண்ட வடிவங்களும், மண் பரப்பின் தடிப்பும், பிளவு காணுமைக்குத் தக்கபடி இருத்தல் வேண்டும். பாண்ட மொன்று எதுகாறும் வெந்து வரல் தகும் என்பதைப் பொறுத்த சூடுறைப்பு தரப்படி யானது (Degtee of Healing) சுடப்பட்டு வரும் பாண்டத்தை அவ்வப்போது சிறு சுத்தியால் தட்டிவந்து, அப்போ தெல்லாம் அதனின்று கிளம்பும் கணீ ரோசையின் தகவையொட்டித் திட்டம் செய்யப்படும் பொரு ளொன்றில் ஒலி செல்லும் விரைவி னளவும், ஒலி யலைகள் அதனில் விரிதலை மட்டுப்படுத்துத் தகையி னளவும், பொருளினது மீள்விர லியல்களை (Elasticity) பொறுத் திருப்பன. எனவே, பண்டத் தட்டலால் எழுகிற ஒலியின் தகவுகள் பொரு ளமைப்பை யொட்டிய மாற்றத் தகவுகளைக் குறிப்பனவாம்.

பாண்டங்களுக்கு மெருகேற்றலை யொட்டி, மெழுகுக் களிமண் பாண்டத்தின்மீது பூசப்படுகிறது. அதன் பிறகு, பாண்டம் சுடப்படுகிறது. பாண்டம் அமைக்கும் களிமண்ணும் மெழுகுக் குழையும் கிட்டத்தட்ட ஒரே யளவான வெப்ப விளை யுறுவை (Thermal Expansion) க் கொண்டிருத்தல் வேண்டும். அன்றேல், மெருகுப் படலம் உரிந்து போகும்படி யாயினும், மெழுகுக் குழை ஆங்காங்குக் கட்டி கட்டிகளாய் நின்றபடி யாயினும், ஆகும்.

இரும்பு, செம்பு இன்னோ ரன்ன உலோகங்களின் பொடிகள் மெழுகுக் குழையிடை மாசுகளா யிருப்பன. அவற்றை யொட்டிப் பாண்டத்தில் கறைகள் ஏற்படுவன. அவ்வாறான மாசுகளை அகற்றற் கான வழிகளையும் பொருணுவணையோரே சுட்டல் வேண்டும். இருப்புத் தூளை, காந்தயி கொண்டு நீக்கி விடலாம். மற்ற வுலோக மாசுக்களைக் களைதல் மிகக் கடினமே.

பாண்டங்களைச் சுடற்கான உலைகளையும் சூளைகளையும் தக்கபடி அமைத்தற் கான பொருணுவணைச் செய்திகள் பல வுள. அவற்றை ஈண்டு விரித் துரைத்தற்கு இடமில்லை.

காற் றியலான உலவைகள் (Gases) பல களிமண்ணில் பொதித்திருந்து, பாண்டம் சுடப்பட்ட பின்னரும் ஆங்கே யிருப்பன வாதலால். பாண்டத்தின் உழப்பு குன்றுகிறது. அன்றி, அவ்வாறான காற்றுக் குமிழிகள் நுரைத்தபடி வெளிப்

பட்டன வாகி, பாண்டத்தின் வெளிப் பரப்பி லோடி மெருகினை அழித்துவிடுவன. காற்றுக் குமிழிகளை யொட்டிய தொல்லை, உலோக வுருக்கு வினையிலும் ஏற்படுகிறது. உலோக வுருக்கு வேலையை யொட்டி அத் தொல்லையை நீக்கும் வழி அறியப்பட்டுள்ளது. அஃது அகற லோசையின் (Ultra Sonics) துடி துடிப்புக்களைப் பொறுத்தது. நாம் காதால் கேட்கும் ஒலி யலைகளின் துடிதுடிப்புக்கள், ஸெக்கண்டிற்கு 20 முதல் 20,000 வரை என்ற வரம்புகளுக் குட்பட்டவை. இருபதினுயிரத்தை விடப் பன் மடங்கு மிக்க துடிதுடிப் பெண் கொண்ட ஒலி யியல் அலைகள் தக்க முறைகளை யொட்டி விளைவிக்கப்பட்டுள. அவை செவிகொள இயலா வகையினவை. உலோக வுருக்குகளி னூடே அவ் வலைகள் செலுத்தப்படின், அவ் வுருக்கானது கடுங் குலுங்க லுறுகிறது. அதை யொட்டி அவ் வுருக்கில் பதிந்திருத்த காற்றுக் குமிழிகள் கிளப்பப்பட்டு வெளியேறு கின்றன. இம் முறையை யொட்டி, களிமண்ணில் பதுங்கி யுள்ள காற்றுக் குமிழிகளைப் பெயர்த்து நீக்கற் கான வழிகளைக் காணுதற் குரிய பொருட்டான ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு வருவன.

இங்ஙனம், குயத் தொழிலை யொட்டி நான் கூறின பொருணுவணைச் செய்திகள் மிகச் சிலவே; கூருமல் விட்டனவே பெருவாரியானவை. மேலை நாடுகளில் அறிவுத் துறைகளுக்கும் தொழிற் றுறைகளுக்கும் நெருங்கின தொடர்பு உள்ளது. அந் நாட்டு மக்களில் பெரும்பாலோர் தெரியற் செய்கை (Science) வாயிலான செய்திகளை அறிதலில் மிகுந்த ஊக்கங் கொண்டவர். நம் நாட்டின் நிலைமையைப் பற்றி நான் எடுத்துக் கூற வேண்டிய தில்லை. அதை, நாம் அனைவரும் நன்கு அறிவோம். அறிவுத் துறைக்கும் தொழிற் றுறைக்கு மிடையே அகண்ட கடல் உள்ளது என்ற கருத்து இன்றும் நம்மில் பலரிடை மறையா துள்ளது. சுவடிப் படிப்பினின்றும் ஆசிரியர் புகட்டலினின்றும் பெறப்படுவன மட்டுமே அறிவுக் குகந்த கல்வி யாகும் எனவும் செய லாராய்ச்சியினுல் காணப்பெற்றவை உயர் கல்வி யாகாது எனவும் எண்ணுவோரின் தொகையே பெரிதா யாயிருப்பது தெரியற் செய்கை கொண்ட ஆள்வினையின் வாயிலாய் ஆன்ற வறிவு ஊறின தொழி லாற்றுகை சிறப்புற்று, நாட்டு மக்கள் செயல்பாற்பட்ட அறிவை விரும்பிப் பேணினவரா யாகும் நாளிலேயே, நம் நாடு முன்னணியில் கொடி யுயர்த்தி நிற்பதாகும். அன்றே, நந் தமிழ் மொழி செயலுடை யறிவு செறிந்த நிறை முழு நிதி கொண்டு திகழ்வதாகும். அங்ஙனம், தமிழ் மக்கள் செயலுழைப்பில் மகிழ்ந்து, தெரியல் விரிவில் மலர்ந்து, வாழ்க்கை நலங்கள் பொலிய வீறு வாய்ந்து உய்வாராக.

தமிழகத்து வட எல்லே.

(புலவர் மா. இராசமாணிக்கனுர், B. O. L., L. T., M. O. L.)

தமிழகத்தைப் பற்றிய எவ்வகைச் செய்தியை ஆராய வேண்டுமாயினும், 'சங்க நூல்கள்' என்று கூறப்படும் பழந் தமிழ் நூல்களேயே முதலில் அடைக்கலம் புக வேண்டுபவராக இருக்கிருேம்; பின்னரே சங்க நூற் கூற்றுகள் எந்த அளவு உண்மை என்பதைப் பிற்காலக் கல்வெட்டுகளேக் கொண்டும், இலக்கியங்களேக் கொண்டும் அறிய வேண்டுபவராக இருக் கிருேம்.

சங்க நூல்களின் பரந்துபட்ட காலம் ஏறத்தாழக் கி. மு. 1000 முதல் கி. பி. 300 அல்லது 400 என்னலாம். இப்பரந்து பட்ட கால எல்லேக்குள் செய்யப்பட்டனவாகக் கூறப்படும் நூல்களே 'சங்க நூல்கள்' எனப்படும். அவை தொல்காப்பியம், எட்டுத் தொகை, பத்துப்பாட்டு முதலியன. இவற்றுள் தமிழக வட எல்லேயைப் பற்றிக் குறிக்கப்பட்டுள்ள குறிப்புகளேக் காண்போம்.

தொல்காப்பியம்

இதன் பாயிரத்தில்,

"வட வேங்கடம் தென்குமரி
ஆயிடைத்
தமிழ் கூறு நல்லுலகம்

என்பது காணப்படுகிறது. எனவே, தொல்காப்பியர் காலத்தில் ஏறக்குறைய வேங்கடமே தமிழகத்தின் வட எல்லேயாகக் கருதப் பட்டது என்பது தெளிவு.

பெருங்காக்கைப் பாடினியம்

இஃதொரு யாப்பிலக்கண நூல். இதனேச் செய்தவர் தொல்காப்பியர் காலத்தவரான பெருங்காக்கைப் பாடினியார் என்ற பெண்பாற் புலவர் என்று யாப் பெருங்கல விருத்தியுரை விளக்குகின்றது. இப்புலவர் நூலில்,

"வடக்கும் தெற்கும் குணக்கும் குடக்கும்
வேங்கடம் குமரி தீம்புனற் பௌவமென்
றின்னுன் கெல்லே"

எனவரும் வரிகளால் தமிழகத்தின் வட எல்லே வேங்கடமே என்பது பெறப்படுகிறது.

சிறுகாக்கைப் பாடினியம்

இதுவும் ஒரு யாப்பிலக்கண நூல். இதனைச் செய்த பெண்பாற் புலவர் முன்னவரின் வேறனவர் என்பதை உணர்த்தச் 'சிறுகாக்கைப் பாடினியார்' எனப்பட்டார். இவர் முன்னவருக்குக் காலத்தாற் பிற்பட்டவர். குமரி யாறு கடல் கொள்ளப்பட்ட பின் நூல் பாடியவர்; அதனால் தமது நூலில் தமிழகத்துத் தென் எல்லை கூறும் பொழுது குமரியாற்றைக் கூறாது கடலை எல்லையாகக் கூறியுள்ளார்.

> "வடதிசை மருங்கில் வடுகு வரம்பாகத்
> தென்திசை உள்ளிட் டெஞ்சிய மூன்றும்......கடல்"[1]

இவர் முன்னவர் போல வட எல்லை வேங்கடம் என்று திட்டமாகக் கூறாமல், 'வடுகு' எனக் கூறியுள்ளது நோக்கத்தக்கது. இது 'வேங்கடத்துக்கு அப்பால்' அல்லது 'வேங்கடத்திற்கு இப்பால்' என்று இருவகையாகவும் கொள்ளலாம். ஆனால் வேங்கடத்திற்குத் தெற்கே 'வடுகு' இருந்தமைக்குச் சான்று இன்மையாலும், கரிகாலன் தொண்டை நாடு முழுவதையும் தன்னடிப் படுத்து ஆண்டான் என்பதாலும், வேங்கடத்திற்கு அப்பால் வடுகு' என்று கோடலே பொருத்தமானது, இதுவே உண்மை என்பதைக் கல்வெட்டுச் சான்று கொண்டு பின்னர்க் காட்டுதும்.

இசை நூல் ஆசிரியரான சிகண்டியார்,

> "வேங்கடம் குமரித் தீம்புனல் பௌவமென்
> றிந்நான் கெல்லைத் தமிழது வழக்கே."

என்று குறித்தனர். இதனால் இயற்றமிழ் வழக்கிற்கு ஒப்ப இசைத் தமிழ் வழக்கிலும் இவ்வெல்லைகளே குறிக்கப்பட்டமை காண்க.

சிலப்பதிகாரத்தில்,

> "நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்
> தமிழ்வரம் பறுத்த தண்புனல் நாடு."[2]

என்பது காணப்படுகிறது. இந்நூலின் காலம் கி. பி. 2-ஆம் நூற்றாண்டென்பர் சிலர்; 5-ஆம் நூற்றாண் டென்பர். உண்மை எதுவாயினும், சிலப்பதிகார காலத்தில் தமிழகத்தின் வட எல்லை வேங்கடம் என்றே கருதப்பட்டது என்பது தெளிவு. அக்காலத்தில் மலையாள நாட்டில் மாங்காடு என்னும் ஊரைச் சேர்ந்த பிராமணன் சேர நாட்டிலிருந்து தொண்டை நாடு வரை

---

[1] தொல்காப்பியம், செய்யுளியல், சூ. 1-உரை

[2] வேனிற்காதை, வரி 1-2.

யாத்திரை செய்து, வேங்கடத்தை அடைந்து, பெருமாளைத் தரிசித்து மீண்டான் என்பது தெரிகிறது. இதனால் அக்காலத் தமிழ் மக்கள் திருவேங்கடத்தைத் தம் நாட்டு வட எல்லையாக மட்டும் கொள்ளாமல், யாத்திரைத் தலமாகவும் கொண்டிருந்தனர் என்பதை அறியலாம்.

அசோகன் காலத்தில் வட எல்லை

அசோகன் காலத்தில் வட பெண்ணையாறே மௌரியப் பேரரசின் தென் எல்லையாக இருந்தது. [3] அவன் தன் பெரு நாட்டில் பல கற்றூண்களை நட்டு, அவற்றின் மீது பௌத்த சமயக் கொள்கைகளைப் பொறித்துள்ளான் அவற்றில், மூன்று தூண்கள் தமிழகத்தைப் பற்றிய செய்தியைக் குறிக்கின்றன.

'என் நண்பர்களான சேர-சோழ-பாண்டிய சத்திய (சதிய) புத்திரர் நாடுகட்கும் அறப் பிரசாரகரை அனுப்பியுள்ளேன்'[4] சேர-சோழ-பாண்டிய நாடுகளின் பரப்பு யாவரும அறிந்ததே. ஆயின், அசோகர் குறித்த 'சத்திய (சதிய) புத்திரர்' யாவர் என்பது கவனிக்கத் தக்கது. அவர்கள், குடகு நாட்டை ஆண்டவர்கள் என்பது புகழ்பெற்ற வரலாற்று ஆசிரியர் கருத்து.[5] அவர்கள் கொங்கு நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது ஒரு சார் ஆசிரியர் கருத்து.[6] எனவே, இந்நூலில் வரும் வடபெண்ணை ஆற்றுக்குத் தெற்கே இருந்தவர், சத்திய புத்திரர் குடகு அல்லது கொங்கு நாட்டிலும், சேரர் சேர நாட்டிலும், சோழர் சோழ நாட்டிலும், பாண்டியர் பாண்டி நாட்டிலும இருந்தனராதல் வேண்டும் என்பது அறியலாம். தொண்டை நாட்டில் பலம் பொருந்திய ஆட்சி இல்லை எனின், அந்நாடு அசோகன் பெரு நாட்டுக்கு இரையாகி இருக்கும் அல்லவா? அங்ஙனம் அடிமைப் படாமையின், வடபெண்ணை ஆற்றுக்கு இப்பாற்பட்ட தொண்டை நாடு என்ற நிலப் பகுதி தமிழரசர் (திரையர்) ஆட்சிக்கு உட்பட்டதாக இருந்ததென்பது பொருத்தமாகும். இத் தொண்டை மண்டல வரலாற்றைக் காணின், தமிழக வட எல்லையைக் கணித்து விடலாம்.

தொகை நூல்களின் தொண்டை நாடு

கி. மு. முதல் அல்லது கி. பி. முதல் நூற்றாண்டினன் என்று கருதப்பட்ட இரண்டாம் கரிகாலன் தொண்டை நாட்டைக் கைப்பற்றினன்; காடு கெடுத்து நாடாக்கினன் என்று தமிழ் நூல்கள் கூறுகின்றன. கி. பி. 7-ஆம் நூற்றாண்டில், கடப்பை சில்லாவை

3 Asoka, p. 105, Map. 4 V. A. Smith's Early History of India and Asoka - Map.

5 *I bid.*

6 Satyanatha Ayyar - Ancient History of Toudaimandalam.

ஆண்ட ரேநாண்டுச் சோழர், தம்மைக் 'கரிகாலன் மரபினர்' என்று தம செப்புப் பட்டயங்களிற் குறித்துள்ளனர்.[7] 'பொத்தப்பிச் சோழர்' என்பவரும், தமமை அங்ஙனமே குறித்துப் பெருமை கொண்டுள்ளனர். கரிகாலன், தொண்டை நாட்டைக் கைப்பற்றிக், காஞ்சியைப் புதுப்பித்தான். ஏகாம்பரர் கோயிலைச் சிறப்பித்தான்.[8] என்று கூறி வந்த வரலாற்றுக் குறிப்பைச் சேக்கிழார் குறித்தலையும் நோக்கக், கரிகாலன் தொண்டை நாட்டைக் கைபபற்றிச், சோழப் பெருநாட்டை விரிவாக்கினுன என்ப தறியலாம். ஆயின், (அவனுக்கு முன்னர்) அந்நாடு திரையர் ஆட்சியில் இருநதது என்பது பின்வரும் குறிப்புகளால் அறியலாம்.

'செல்லா நல்லிசைப் பொலம்பூண் திரையன்
பல்பூங் கானல் பவத்திரி அன்ன' (அகம். 340)

'வென் வேல் திரையன் வேங்கட நெடுவரை' (அகம். 85)

'வினை நவில் யானை விறற்போர்த் தொண்டையர்
இனமழை தவழும் ஏற்ற(ரு) நடுங்கோட்(டு)
ஓங்கு வெள் ளருவி வேங்கடத் தும்பர்
....
..............வடுகர் தேஎத்து' (அகம். 213)

இக்குறிப்புகளுடன் இளந்திரையனைப்பற்றிய வரலாற்றுக்குறிப்புகளையும் ஒன்று சேர்பபின், காஞ்சியைத் தலைநகராகக்கொண்ட தென் தொண்டை நாட்டை (அருவா நாட்டை) தொண்டைமான் இளந்திரையன் என்பவன் ஆண்டு வந்தான்; பவத்திரியைத்[9] தலைநகராகக கொணட வட தொண்டை நாட்டை 'அருவா வட தலை நாட்டைத் தொண்டைமான் திரையன் என்பவன் ஆண்டு வந்தான். அவன் ஆட்சிக்கு வேங்கடமும உரிததாக இருந்தது' 'வேங்கடத்தை அடுத்து உள்ளது வடுகர் நாடு' என்பன இங்கு அறியத்தகும.

வேங்கடம்

வேங்கட மலைத் தொடர் ஏறத்தாழ 40 கல் அகலமும், ஏறக்குறைய 30 கல் நீளமும் உள்ளது. வேங்கட மலைத் தொடர்கு அப்பால் இருப்பன கடப்பை, கர்நூல் சில்லாக்கள். வேங்கட மலைப்பகுதி சங்க காலத்தில் புல்லி என்ற சிற்றரசன் ஆட்சியில் இருந்தது. ஆயினும, அப் பகுதிக்குப் பேரரசன்

7 Rangachari, Cuddappa Ins. PP. 309, 318, 350, 405, 409, 435, 405, 550, 453, 455.

8 திருக்குறிப்புத் தொண்டர் புராணம், செ. 85.

9 இக்கால ரெட்டிபாளையம்-கூடூர்த் தாலுக்காவில் (செல்லூர் ஜில்லாவில்) உள்ளது.

திரையன் என்பவன். சங்க காலப் புலவர் சிலர், வேங்கடத்தை நன்கு பார்வையிட்டவ ராவர்; அதன் சிறப்பியல்புகளையும், அதனை ஆட்சிப் புரிந்தவரைப் பற்றியும் அறிந்தவ ராவர்.

'கழல்புனை திருந்தடிக் கள்வர் கோமான்
மழபுலம் வணக்கிய மாவன் புல்லி
முழவுடை விழுச்சீர் வேங்கடம்' [10]

'கல்லா இளையவர் பெருமகன் புல்லி
வியன்றலை நன்னாட்டு வேங்கடம்' [11]

'நிறைபல குழீஇய நெடுமொழிப் புல்லி*
தேன் தூங்கு உயர்வரை நன்னாட்டு(உ)ம்பர்
வேங்கடம் இறந்தனர் ஆயினும்' [12]

'.................வேங்கடத் தும்பர்
மொழிபெயர் தேஎத்தர்.' [13]

'செந்நுதல் யானை வேங்கடம் [14]
வேங்கடம் பயந்த வெண்கோட் டியானை' [15]

'...............புல்லிய
வேங்கட விறல்வரைப் பட்ட
வோங்கல் வானத் துறையினும் பலவே'' [16]

[புல்லியினுடைய வேங்கடமாகிய பெரிய மலையினிடத்துப் பெய்த மழைத் துளியினும் பல நெடிய காலம் வாழ்வானாக]

என்ற இந்த வாழ்த்துரையால், கல்லாடர் என்ற சங்க காலப் புலவர் வேங்கடத்தின் மீது மிக்க பற்றுடையவர் என்பது தெரிகிறது. அவர் வேங்கடப் பகுதியினராக இருக்கலாமோ? இருக்கலாம் என்று கூற இடமுண்டு.

அவர் மோசுறையாற்று கிழானைப் பாடும் பொழுது,

'வேங்கட வரைப்பின் வடபுலம் பசித்தென
ஈங்குவந் திறுத்தஎன் இரும்பே ரொக்கல்
வேலி ஆயிரம் விளைகநின் வயலே' [17]

(வேங்டமலை எல்லைக்கப்பாற்பட்ட வடபால் நிலத்தில் பஞ்சம் உண்டானது. அதனால் நாங்கள் அவ்விடம் விட்டு இங்கு வந்து தங்கினோம்.)

என்று பாடியிருத்தலால், அவர் வேங்கட நாட்டுப் பகுதியினராகலாம் என்று கருத இடமுண்டு.

---

[10] அகம். 61 * தெலுங்கில் புல்லையன், புல்லம்பாய், புல்லா ரெட்டி
[11] அகம். 83 என இக்காலத்தில் பெயர் உள்ளமை அறிக.
[12] அகம். 393 [13] அகம். 211 [14] அகம். 265 [15] அகம். 27
[16] புறம். 385 [17] புறம். 391.

சங்க காலத்தில், வேங்கட நாட்டுத் தலைவர் சிலர் புலவராற் குறிக்கப்பட்டுளர். அவர் (1) கரும்பனூர் கிழான் [18] (2) ஆதனுங்கன் [19] என்போராவர். அவர்கள், தமிழ்ப் புலவர் பாராட்டும் தண்ணளி உடையவராய், ஈத்துவக்கும் இன்பத்தில் ஈடுபட்டிருந்தனர் என்பது அறியக்கிடக்கின்றது.

தொண்டை நாட்டுக் கோட்டங்கள் 24

சங்க காலத்தை அடுத்துத் தொண்டை நாட்டை ஆண்ட பல்லவர் கல்வெட்டுகளிலும், பட்டயங்களிலும், தொண்டை நாடு பல கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்த உண்மையையும், அப் பிரிவுகள் அப் பல்லவரால் புதியனவாகப் பிரிக்கப்படவில்லை என்ற உண்மையையும் அறியலாம். அக்கோட்டங்களாவன;—

(1) புழல் கோட்டம் (2) ஈக்காட்டுக் கோட்டம் (3) மணவிற் கோட்டம் (4) செங்காட்டுக் கோட்டம் (5) பையூர்க் கோட்டம் (6) எயில் கோட்டம் (7) தாமல் கோட்டம் (8) ஊற்றுக்காட்டுக் கோட்டம் (9) களத்தூர்க் கோட்டம் (10) செம்பூர்க் கோட்டம் (11) ஆம்பூர்க்கோட்டம் (12) வெண்குன்றக் கோட்டம் (13) பல்குன்றக்கோட்டம (14) இளங்காட்டுக்கோட்டம் (15) காரியூர்க் கோட்டம் (16) செங்கரைக் கோட்டம் (17) படுவூர்க் கோட்டம் (18) கடிகூர்க் கோட்டம் (19) செந்திருக்கைக் கோட்டம் (20) குன்றவட்டான கோட்டம் (21) வேங்கடக் கோட்டம் (22) சேத்தூர்க் கோட்டம் (23) வேலூர்க் கோட்டம் (24) புலியூர்க் கோட்டம்.

இவை அனைத்தும் தமிழ்ப் பெயர்களே அல்லவா? இவை பல்லவரால் இடப்பட்டவை அல்ல; பல்லவர்க்கு முற்படத் தொண்டை நாட்டை ஆண்ட சோழராலும் இடப்பட்டவை அல்ல; என்னை? இப் பிரிவுப் பெயர்கள் சோழ நாட்டில் எக்காலத்திலும் இருந்தில ஆதலின் என்க. சோழர்க்கும் முற்பட்ட காலத்தில், 24 கோட்டங்களாகப் பிரித்து ஆண்ட குறும்பர் காலத்தில் இடப்பட்டவை என்பது வரலாறு. அஃது உண்மையாயின், **தொண்டை நாடு முழுவதும் தூய தமிழ் நாடு என்பதை அறியலாம்.**

குன்றவட்டமான கோட்டம் என்பது சந்திரகிரியும் அதனைச் சுற்றியுள்ள நிலப்பகுதியும் ஆகும். [20] வேங்கடக் கோட்டம் என்பது திருப்பதியைத் தலை நகராகக் கொண்ட ஒரு

---

[18] புறம். 371 [19] புறம். 389 [20] 628 of 1905.

மலை நாட்டுப் பகுதி, பையூர்க் கோட்டம் என்பது கூடூர்த் தாலூக்காவைத் தன் அகத்தே பெற்ற நிலப் பகுதி.[21] கூடூர்த் தாலூக்காவில் உள்ள 'மல்லம்' பழைய காலத்தில் **திருஆன்பூர்** எனத் தமிழ்ப் பெயர் பெற்றிருந்தது. அப்பகுதியில் இருந்தவர் தமிழர் என்னும் விவரங்களைப் பல கல்வெட்டுகள் வாயிலாக நன்கு அறியலாம்.

மாதிரிக்கு ஒன்றைக் காண்க.[22]

"ஸ்வஸ்திஸ்ரீ நந்தி போத்தரசர்க்கு[23] பதினைந்தாவது பையூர் இளங்கோட்டத்துத் திருவான்பூர் ஸுப்ரம்மண்யன அவ்வாட்டைப் பொன் அயிம்பத்தைங் கழஞ்சு கொள்ளும் மது வார் அட்டுவித்த கழஞ்சு பொன்னும் விளக்க புறமாக ஆருவ அரசர் விண்ணப்பத்தினல் சாளுக்கிய அரசரானமீ......த்தி யாகப் பாவித்தோம், நாட்டாரும் ஊராரும் ஆள்வாரும் அறம் மறவர்க்க,

முடிவுரை

வடபெண்ணை ஆற்றங்கரையில் உள்ள நெல்லூர் தமிழ்ப் பெயர் கொண்ட ஊர் என்பதும் இன்னும் அப்பகுதியில் உள்ள தெலுங்கரிடை நல்ல தமிழ்ச் சொற்கள் வழக்கில் இருப்பதும் கொண்டு இதுகாறும் கூறிய பலவகைச் சான்றுகளையும் நடுவு நிலையிலிருந்து ஆராயின், வடபெண்ணை ஆறுவரை இருந்த தமிழகம் பையப் பையச் சுருங்கிக், கூடூர் காளத்தி வேங்கடம் வரை வந்துவிட்டது என்பதை நன்ருக உணரலாம். கி. பி. 12-ஆம் நூற்றுண்டில் காளத்தி தமிழ் நாட்டின் வட எல்லையாக இருந்தது என்பது சேக்கிழார் செப்பும் சான்ருகும்.[24] 14 ஆம் நூற்றுண்டில் இருந்து தமிழகம் விசய நகரத்தார் ஆட்சிக்கு உட்பட்டது. ஆதலின் தெலுங்கர் தெற்கே பரவத் தொடங்கினர்; குடியேறி நிலைத்தனர்; ஆட்சியும் புரிந்தனர். இவ்வரலாற்று நிகழ்ச்சிகளால் சென்னைவரை தெலுங்கர் செல்வாக்கு மிகுதிப்பட்டது.

ஆங்கிலேயர் ஆட்சியில் சென்னை மாகாணம் தலைநகரமாய் விளங்குவதால், தெலுங்கர் சென்னையில் நன்கு வேரூன்றலாயினர். ஆயினும், நடுவு நிலைமையும் வரலாற்றுணர்ச்சியும் உடைய **நல்லறிஞர், தமிழகத்தின் வடஎல்லை கூடூர் - காளத்தி - வேங்கடம் இவற்றை உள்ளிட்டது என்பதை ஒருபோதும் மறுக்கார்; தமிழ் நாட்டுக்குத் துரோகம் செய்யார்.**

---

21 Nellore Inscriptions Vol, I, P 430

22 Nellore Ins. Vol I, P 430

23 மூன்றும் நந்தி வர்ம பல்லவன், இவன் காலம் (கி. பி. 840-865)

24 சம்பந்தர் புராணம், செ. 1026

பேரையூர், அம்பாள்குளம் பொய்யாத விநாயகர் திருவடி பரவிய தேவபாணி.

மலையரசன் திருப்பாவை வாணுதலா ளுளமகிழுங்
கலையரசே கற்றோர்கள் காதலிக்குங் கற்பகமே

நல்லறத்தின் தனிமைந்தன் நானிலங்கா ரணமாக
வில்லறத்தின் வழிநின்ற விறற்சரிதங் கிரிப்புறத்தில்

எழுதுகரு ணீகநின திணையடியே புணையாகப்
பழுதில்கலைக் கடலென்னும் பரவையினைக் கடப்பேமால்

திருநாரை யூர்வாழுந் திருவாளா அருளாளா
பெருநாரை பெருங்குருகு பேரிசையே சிற்றிசையே
உருவாய தமிழகத்தி லுயர்மூவர் தெய்வஇசை
வருமாறு பணித்ததுவும் மன்னியநின் னருளன்றோ

முத்தமிழும் பெருக்கியசீர் முதல்வனார் திருக்குமரா
பத்தியுடன் பணிபவர்க்குப் பலகலையும் பாலிக்கும்
சித்திபுத்தி நாயகனே திருமுறைகள் தமிழகத்தில்
நித்தநிலை பெற்றதுவும் நின்னருளின் திறனன்றோ

திருக்கிளருஞ் சோழமன்னர் தேவாரத் திருமுறைகள்
இருக்குமிட மெதுவென்ன வியம்புதியென் றுனைப்பணிந்து
வருக்கைநறுந் தேன்கதலி யெள்ளுண்டை யப்பமவல்
பெருக்கவவர் கருத்துமுற்றப் பெற்றதுநின் னருளன்றோ

என வாங்கு,

திருந்திய தமிழாற் சேவடி பரவுதும்
தெய்வத் தமிழிசை வையத் துயர்வுற
பத்தர் கோடே நரம்பே யாப்பென
வைத்த வுறுப்பு வளம்பெற மன்னி
செம்மை படுமலை செவ்வழி யருமை
கோடி விளரிமேற் செம்பா லையென
ஏழ்பெரும் பாலையு ளியன்ற நல்லிசை
சீரே பாணி தூக்கன நின்ற
முத்திறத் தானமு மெத்திறத் தோரும்
கேட்டுமகிழ் வெய்தப் பாட்டி னியலும்
பண்ணி னியலு மெண்ணியாய்ந் துரைக்கும்
யாழ்நூல் பொலிவுற் றேழிசை பரப்புக
மழைவளஞ் சுரந்து மன்னுயி ரோங்குக

நின்னடி பணிந்த இராமன் சீர்மிக
நல்லோர் அவைக்களம் நாளும் பொலிக
பேரையூர் மன்னிய சீருடைச் செல்வ
அம்பாள் குளத்தி லணியெற அமர்ந்த
பொய்யா விநாயக, பூரண, என்றே.

[ஆலயத்திருப்பணியே ஆண்டவன் சேவையெனக் கருதி, திருக்கொள்ளம்பூதூர் முதலிய கோயில்களை, இருபத்தைந்து நூறாயிரம் வெண்பொற் காசுக்கு மேலும் செலவிட்டுத் திருப்பணி செய்த திருவாளர் பெ. இராம. இராமன் செட்டியார் அவர்கள் முன்னோர்கள் தொடக்கமாக வழிபட்டு வருகின்ற கடவுள், பொய்யாத விநாயகர். இவர் எழுந்தருளியுள்ள கோயில், புதுக்கோட்டைக்கு மேற்கில் ஆறு கல் தொலையில் உள்ளது. இக் கோயில் பேரையூர் அம்பாள் குளக்கரையில் உள்ளதாகும். இக் கோயிலை நோக்கிச் செல்லும் சாலை, இருமருங்கும் தவித்தவர்க்குத் தலையாலே நீர் தரும் கற்பகக்கா நிறைந்தது. இச் சாலை வழியே சென்றால் மூத்த பிள்ளையார் உறைவிடம் காணப்பெறும். இவ்விடம் மிக்க அமைதியானது. ஆரவார மில்லது. கோயிலின் நான்கு பக்கங்களும் அரசு, ஆல் முதலான மரங்கள் அடர்ந்து குளிர்ந்த நிழலைத் தந்துகொண்டு இயற்கை யழகோடு விளங்குகின்றன. இதன் பாங்கர் நந்தவனந் தீர்க்கும் நந்தவனம், ஆண்டவனை வழிபாடு செய்தற்குரிய நறு மலர்களைத் தந்து நிற்கின்றது. இத்தகைய அழகுடன் விளங்கும் ஆண்டவனைக் காண்பதற்கு, அறச் செல்வர் திரு. இராம. சிதம்பரம் செட்டியார் அவர்களோடு சென்ற அருட்டிரு. விபுலாநந்தர் அவர்கள், மூத்தபிள்ளையாரின் முகமலர்ச்சியி லீடுபட்டு, அவ்விநாயகர் மீது தேவபாணி யென்ற இத் தோத்திரப்பாவை யியற்றி யருளினார்கள். இஃது அவ்வாண்டவன் முன் பாடப்பெற்றது. இத்தேவபாணி பின் நிகழ்ந்த யாழ் நூல் அரங்கேற்று விழாவிற்கு விடை (அனுக்ஞை) பெற்ற முறையில் அமைந்தது.]

உள நூல்

முன்னுரை

தமிழ் மொழியில் கலை நூல்கள் இல்லை என்பது மேலை நாட்டுக் கலைகளில் தோய்ந்து கிடப்பார் இக்காலத்துக் கூறுவ தொன்றாகும். பண்டைத் தமிழிலக்கியங்களையும் சமய நூல் களையும் மனம் ஒன்றிப் படிப்பார் இத்தகைய இழிசொல்லைத் தமிழன்னைபால் ஏற்றார். தனித்தனி கலை நூல்கள் ஒரு காலத்திற் சிறந்தன என்பதையும் அவை கடல் கோளானும் வேற்று நாட்டார் வருகையானும் அழிந்துபட, எஞ்சியுள்ள நூல்களில் அங்கொன்று மிங்கொன்றுமாகக் கலைச்சின்னங்கள் காணக்கிடக் கின்றன என்பனதயும் அவர் உணராது இரார். தாவர நூல், விலங்கு நூல், வான நூல், உடல் நூல், உள நூல் முதலிய வற்றின் நுட்பங்களைத் தமிழ் இலக்கியச் சூழலினின்றும் பெயர்த் தெடுத்து ஒருவகைப்படுத்தின், அது தமிழ்மொழியின் ஏற்றத் தினை அனைவரும் அறிவதற்காற்றும் ஒரு பணியாகும.

ஆங்கிலம் வடமொழிபோன்றவற்றில் 'சைகாலஜி' 'மனோ தத்துவ சாஸ்திரம்' என்ற கலை நூல்கள் இருப்பதைப்போலத் தமிழில் உளநூல் என்று தனித்ததோர் நூல் இல்லையாயினும், பண்டைத் தமிழ் நூல்களுள் புதைந்து கிடக்கும் கருத்துக்களை ஒருவகைப்படுத்தின அத்தகைய குறைபாடு நீங்கும். அக்குறை பாட்டைத் தவிர்க்க முயல்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மக்களின் பாகுபாடு

நின்னை யறப்பெறு கிற்கிலேன் நன்னெஞ்சே
பின்னையான் யாரைப் பெறுகிற்பேன்—நின்னை
அறப்பெறு கிற்பனேல் பெற்றேன்மற் றீண்டு
துறக்கம் திறப்பதோர் தாள். — முனைப்பாடியார்.

பூமியின்கண் காணப்பெறும் பொருள்கள் எல்லாவற்றினும் சிறந்தது மனிதப் பிறவியே யாகும். இப்பிறவியினால் ஆகாத காரியம் ஒன்றுமே யில்லை. 'அரிது அரிது மானிடராதலரிது' என்று கூறியுள்ளார். இவ்வரிய பிறவியை எடுத்துள்ள மனிதர் ஒவ்வொருவரிடத்திலும் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்று கரணங்கள் உள. இவற்றில் முதலாவதாகவுள்ள மனம் சரிவர வேலை செய்யாவிட்டால் மற்றவை இரண்டும் பயனைத்தரா.

மனத்தினுலேயே மக்கள் பிற உயிர்களினின்றும் வேறுபடு கின்றனர். இவ்வுண்மை

மாவும் மாக்களும் ஐயறிவினவே
மக்கள் தாமே ஆறறியுயிரே. என்ற தொல்காப்பியத்

தாலும், 'சிறப்பின்பாலார் மக்கள் மருளுடை மாக்கள்' என்ற மணிமேகலையாலும் நள்ளென்றே......தேனே என்னுங் குறுந் தொகைச் செய்யுளில் மாக்கள் என்னுஞ் சொல்லிற்கு எழுதிய உரையாசிரியர் குறிப்பாலும் விளங்கும். விலங்கினங்களைப் போன்று மாக்கள் உள்ளரென்றும் மனத்தால் உயர்ந்த மக்கள் அம் மாக்களைவிட உயர்ந்து விளங்குகின்ருர்கள் என்றும் அறிகின்ருேம்.

மனத்தினுல்தான் மக்கள் உயர்நிலையையும் தாழ்நிலையையும் எய்துகின்றனர். இதனை மனத்தனையர் மக்கள் என்பார் என்றும் நாலடியாரின் செய்யுட் பகுதி வலியுறுத்துகின்றது. மனிதருள் மேற்கூறிய மாக்கள் என்ற பாகுபாடே யன்றிப் பிறர் நினைத் துணரும் தெய்வத் தன்மை யுடையாரும் உண்டு. இதனை,

ஐயப்படா தகத் துணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல்.

எனத் திருவள்ளுவரும்

உடம்பு முதலியனவற்ருன் ஒவ்வாராயினும் பிறர் நினைத் துணரும் தெய்வத் தன்மை யுடைமையின் தெய்வத்தோ டொப்ப என்ருர் என்று பரிமேலழகரும் கூறுகின்றனர். மேற்சொல்லிய வைகளிலிருந்து மக்கள் மூவகை நிலையினர் ஆவர் என உணர்தல் கூடும்.

க. பிறர் உணர்த்த உணரும் மாக்கள்.

உ. தாமே உணரும் மாக்கள்.

ங. பிறர் மனத்தையும் உணரும் தெய்வத் தன்மை உடையார் மனநிலை உயருமாயின் மாக்கள் மக்களாகவும் மக்கள் தெய்வத் தன்மையராகவும் மாறுபாடு எய்தி முறையே உயர்வை யடையலாம் என்பது மேற்கண்டவற்ருல் புலப்படும் உண்மை யாகும்.

ஆதலால் இவ்வுயரிய மனத்தைப்பற்றி ஆராய்தல் மிக இன்றியமையாததொரு காரியமாம்.

மனம் என்பது யாது

நினைப்பு உண்டாவதற்குக் காரணமாயிருப்பது மனம். இதனை மனமது நினைய (சித்தியார்) மனத்தினுற் கருதி (பெரிய) மனத்தின் வடிவம் சங்கற்பம் (ஞானவா) என்ற முதற் குறிப்புள்ள செய்யுட்கள் மேற்குறித்த பொருள் அமையும் என்பதை விளக்குகின்றன.

பெருமூளை முதலியன மனமென்று கொள்ளுதல் பொருந்தாது. இவை மனம் இருத்தற்குரிய இடங்களாம். தார்க்கிகர் மனத்தை அணுவென்று கூறிப்போந்தார். அதிவீரராமபாண்டியரும் அணுவென்றே கொண்டுள்ளார்.

சிவஞானபாடியக்காரர்......மனம் நாட்டின்கண் நிகழ்வனவற்றைச் சென்றறிந்து வந்து, வேந்தர்க்குப் புலனுகச் செய்யும் ஒற்றர் போலப் புற இந்திரியங்களான் அறிந்த விடயத்தை இடையே நின்று பற்றிப் புத்தியின் எதிர் பிம்பமாய்த் தோன்றுமாறு கொண்டுய்க்கும் அக இந்திரியமாய்க் காகத்தின் கண்மணி போல் அகம் புறம் ஆகிய ஈரிடத்தும் விரைந்து செல்லும் சதாகதியுடையதாய் நிற்பதாகலின் புற இந்திரியங்களோடொப்பத் தானும் சாத்து விகாரத்தினின்றும் அவற்றிற்கு முந்தித் தோன்றுமென்றல் பொருந்துமாறு அறிக என்று மனத்தின் இலக்கணத்தைக் கூறியுள்ளார்.

எனவே மனம் என்பது அருவமாய் எண்ணங்கள் தோற்றுவிக்கும் ஒருவித ஆற்றல் வாய்ந்த அகக்கருவி என்று சுருக்கமாக அதன் தன்மையை எடுத்துக் கூறலாம்.

உட்கருவி

அருமை வாய்ந்த மக்கள் தொழில் ஆற்றுவதற்கு உதவி புரியும் கருவிகள் இரண்டு வகையாம். அவை கை, கால் முதலிய புறக் கருவியும், நினைத்தல் அறிதல் முதலியவற்றைச் செய்யும் அகக் கருவியுமாம்.

அவற்றுள் இரண்டாவதாகக் கூறப்பட்ட அகக் கருவி நான்கு வகைப்படும். (1) எண்ணல் (2) அறிதல் (3) மீட்டும் எண்ணல் (4) வன்மை அடைதல் என்பனவாம். இவற்றை வடநூலார் முறையே மனம், புத்தி, சித்தம், அகங்காரம் எனப் பெயர் கூறுவர். இந்நான்கையும் தமிழில் உட்கருவி என்பது போல் வடநூலார் அந்தக்கரணமென வழங்குவர்.

மனம் ஒன்றே செய் தொழிலின் சிறிது வேறுபாட்டால் நான்கு பெயர்களையும் பெற்றது என்பது உற்று நோக்குவார்க்குத் தெற்றெனத் தெரியும். இவ்வாறு சிறிது வேறுபடும் மன

நிலையை யுணர்ந்து பெயர்கள் தனித் தனி வைத்திருத்தல் நம் முன்னோர் கண்ட நுட்பங்கள் பலவற்றுள்ளும் தலைசிறந்த தொன்றும் என்பதே முடிவாகக் கொள்க.

இதனால், மனம் ஒன்றே என்பதும், சிறிது வேறுபடும் உண்மையால் வேறு பெயர்களை அடைந்தது என்பதும் விளங்குகின்றன.

இதயம் அல்லது மனத்திடம்

மலர்மிசை ஏகினன் என்ற திருக்குறளில் மலர் என்னும் மொழிக்குப் பரிமேலழகர் உள்ளக் கமலம் என விசேட உரையில் குறித்திருப்பதாலும், மனத்தாமரை என ஞானவாசிட்டம் என்னும் நூலில் மொழிவதாலும் உளத் திருமலர் என குமர குருபர சுவாமிகள் விளக்கியருளலாலும் மனத்திற்கு நிலைக்களமாக இருக்கும் இதயம் தாமரைமலர் போல இருக்கின்றது என்பது தெரியவரும்.

மன முகிழ்த்த சுருணீக்கி மலர்விக்கும் (பெரிய புராணம்) குவியு மனமரு (க்ஷேத்திரக் கோகை) என மலருக்குள்ள, குவிதல் மலர்தல் ஆகிய தொழில்கள் மனத்திற்கும் வந்திருப்பன மனத் தாமரை என்பதையே வலியுறுத்துகின்றன. வடநூலார் இருதய கமலம் என இக் கருத்துடனேயே வழங்கியிருக்கின்றனர்.

தற்காலத்திலுள்ள உடல் நூற் புலவர் இடது மார்பின் கண் ஆறு ஏழு விலா எலும்புகளுக்கு இடையில் தாமரை மொக்கு ஒன்றைத் தலைகீழாக தொங்க விட்டாற்போல் விளங்குவ தனைக் கண்கூடாகக் காட்டுவதுடன், படங்கள் வரைந்து அவற்றின் மூலமாகவும் விளக்குகின்றனர். இதயத்தின் வடிவ அளவு ஒவ்வொருவருக்கும் அவரவர் வலக்கை விரல்களை மூடிய (முஷ்டி) அளவு இருக்குமென்று உரைப்பர்.

திருக்குறள் நிகண்டு முதலிய நூல்களில் மனத்திற்குப் பெயர்கள் பல வந்துள்ளன. அவற்றுள் சிலவற்றை மாத்திரம் இங்கு குறிப்பிடுகின்றேன். அவை அகம், ஆகம், உரம், உள், உளம், நெஞ்சு என்பனவாம். இப் பெயர்கள் இதயத்திற்குப் பெயராகிப் பின்னரே மனத்திற்குப் பெயராய் வந்துள்ளன. இவ்வாறு வருவனவற்றைத் தமிழ் இலக்கண நூலார் ஆகு பெயரென வழங்கா நிற்பர்.

(300-ஆம் பக்கத்தொடர்ச்சி)

கூர்ந்து சிந்திக்கப் புகின், ஈவார்மேனிற்கும் அழியா இயல்புடைய புகழொன்றினுல் மட்டும் ஒருவருக்கு நில வரையில் எக்காலும் வரக்கூடிய நலனும் பயனும் ஒன்று மில. நினைவார் நினைதொறும் தமது பெருமை குன்ற விடாது நடந்துகொள்ளும் அந்தண்மை மாண்பினுல் விளைந்து, அன்பு நெறியில் ஒடுங்குவது புகழ். புகழ்பட வாழ்தல், வாழும் மக்களுயிர்க்கு அரிதாதலின், அதனை ஒரு கலிமாப் புரவி இயக்கும் வாதுவ னைப்ப வல்லாங்கு நடத்தல் இன்றியமையாதது. அன்றேல், புகழ் அதை நாடுப வனுக்கு ஒரோவழி மறவுணர்வும் ஆணவமயக்கமும் தந்து, செல்லா வாழ்க்கையில் புகுத்தி அவனது அகந்தைக்கே உண்ணும் பொருளாய்ப் பொருந்தும். எனவே உணர் வாற்ற லுடையார், இரப்போர் தாம் விழையும் பொருள் பெறற்குப் புகழும் உரையினை விரும்பாது, நாடவர் பழித் துரை பூணதுவாகக் கொண்டும், பொன்றுப் புகழுக்குக் காரணமாய நற்பண்பு, நற்செய்கை நல்வாழ்க்கை நிலைகளை நாடி, தம்மையொத்த மன்னுயிர்கள், இலனென்னு மெவ்வ முரைத்தற்கு முன்னரே குறிப்பறிந்து, உணவுக் கலமரா நிற்கும் வண்ணம் உண்டி கொடுத்தலே தலைசிறந்த அற மென முடிவு கட்டிப்பலரோடுண்ணும் முறையைத் தழுவி னர். 'படைப்புப் பல படைத்துப்பலரோடுண்ணும்' பெருந் தண் வாழ்வுடையார்க்கே செல்வரென்னும் சொல் பொருந்து மென்பது பாண்டியன் அறிவுடை நம்பியின் பரிவுரையால் விளங்கும்.

உயிர்நிலை, அன்பின் வழியது. உயிர்கள் பல்வகைப் பட்ட உடலின்கண் நிலைநிற்றற்கு உணவளித்தல் சிறந்த அன்புடை அறமாகும். அஃதே உய்யும் வகையினுயிர்ப்பு. உணவளித்தல் எற்றிற்கோ வெனின், அஃது உயிர்க்கு இறுதி வராமற் காக்கும் பொருட்டே யாமெனக. இஃது அறனெறி பிழையா திறனறி சான்றோ ரெல்லார்க்கும் ஒப்ப முடிதலான், புரக்கும் செயலின் சிறப்புடைமை தோன்ற வள்ளுவப் பெரியார் 'பகுத்துண்டு பல்லுயிரோம் புத னூலோர், தொகுத்தவற்று ளெல்லாந் தலை' என்ற குறட்பாவிலே, தனதின்னுயிரைக் காக்க உண்ணுதலோடு, அதனையு எச்சமாக்கி ஓம்புதலோடு கூட்டிவைத்த திறம் சற்றுணற் பாலதே.

உயிர்களெடுத்த ஊனுடல் உணவின் பிண்டமாதலால் நன்கறிந்த தமிழ்ச் சான்றோர் பிறவியின் விழுப்பயன் உண

வினையே சார்ந்து நிகழ்கின்றதென பெரிதறிந்து, போற்றி, புகழைப் பொருளாகக் கருதாது, புகழ்வரத்தக்க ஈகை முதலாய அறங்களையே கடைப்பிடித்தனர். இதனுனன்றே 'ஈதல் இசைபட வாழ்தல்' என்ற வள்ளுவரது செய்ய பொய்யா மொழியும் எழுந்த தென்பது இங்கு நினைவு கூர்ந்து இன்புறற்பாலது. 'உணவின் பிண்டம் உண்டி முதற்றுகலின் ஈதல் சிறந்தது' எனப் பரிந்து கூறுவாராயினர் பரிமேலழகர். 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்ற மெய்யுரை யொன்றே உய்வுறை மாண்பினை மெய்ப்பிக்கச் சாலும். எனவே ஈதலொன்றே உயிர்க்கு உறுகருவியாய் நிற்றலின் அதன் மாட்சியும் ஈண்டு தெளிதலாயிற்று. தம்மை யொத்த ஆருயிர்த் தொகைகளுக்கு உண்டி கொடுத்தலானே ஊனுடம்பில் உயிர்நிலை பெறுதலும், அவ்வாறு நிலைபெற்ற உயிர், அன்பு, அருள், அறிவு முதலிய உள்ளியல்புகளானே இறைநிலை விளக்கங் கொள்ளுதலும் விளங்குதலின், பிறவியை நலமுடைய தாக்கும் வல்ல உணவை வழங்கிப் புரத்தலல்லது உயிருக்கேற்ற ஊதியம் பிறிதொன்றுமில்லை.

கொள்வோரும் கொடுப்போருமின்றி இஞ்ஞாலத்தே ஒரு தன்மையரானே ரிலதாதலான், பொருளற்றூர் ஈயக் கூடாமைபற்றி, ஈதலறத்தாலாய உயிரின் ஊதியமும், ஈத்துவக்கும் இன்பமும் அன்னவர்க்கு இல்லையோயெனின் அஃது அற்றன்று. அஃதியாதோவெனின், ஈகை வாழ்க்கையிலா அன்னவர், இன்னுதன வெல்லாம் இன்னு செய்தவர் மேலானவா மெனக் கொண்டு தம்மை கறுத்துச் செறுவார்க்கும், தீய செய்யாது விடுவரேல், ஈதலின்றியே உயிரின் ஊதியத்தையும் மெய்யின்பத்தையும் எளிதிலெய்துவர். 'ஒருத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப், பொன்றுந் துணையும் புகழ்' என்பது இதற்கு நேரிய சான்று.

எனவே, அறம் கடவாது அருள் மெய்யில் நிற்க, ஊனுலா வுயிர்க்கும் ஆக்கமளிக்கும் ஈதலொடு புரத்தலும், செறுவார்க்கும் தீய செய்யாது வாழ்வதும் மக்களுயிரின் ஊதியமாகு மென்பதும், மற்றும் செச்சைக் கண்டத் தொத்தூன்போ லல்லாது இருமையும் பயப்ப, தமவும் பிறவும் ஒப்ப நாடி, ஈதலறப்பேர் வாழ்க்கைமேற் கொள்பவர், மெய்ப் புகழான் தோன்றுதல் பொன்றுதலின்றி வையமிசை இசைபட வாழ்வது வெள்ளிடை விலங்கலென்பதும் பெற்றும்.

உ

மணிவாசக மன்ற 4வது ஆண்டு விழா
அரியிலூர்.

நிகழ்ச்சி.

அரியிலூர் உயர்நிலைப் பள்ளியில் மேற்படி மன்ற நான்காம் ஆண்டு நிறைவு விழா 23, 24, 25—6—47ல் சிறப்புற நடைபெற்றது. முதல் நாள் சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த் துணைப் பேராசிரியர் திரு. மெ. அ. துரையரங்கனார் அவர்கள், B.O.L., தலைமை தாங்கி, "மணிவாசகரும், மணிமொழியும்" என்பனபற்றிச் சொற்பொழிவாற்றவும், பின்னர் கிருட்டினகிரி திரு. K. N. தெய்வயானை அம்மையார் அவர்கள் வில்லிபாரதத்தில் "பழம்பொருந்து சருக்கம்" என்பதுபற்றி விரிவுரையாற்றவும், இரண்டாம் நாள் பூவாளூர் பெருஞ்சொல் விளக்கனார் திரு. அ. மு. சரவண முதலியார் அவர்கள் தலைமையில், சாத்துக்குடல், அமுத மொழியார் திரு. தீ. சொ. சாமிநாத பிள்ளை அவர்கள் "திருமந்திரம்" என்பதுபற்றியும், தலைவரவர்கள் "திருக்கோவையார்" என்பதுபற்றியும் சொற்பொழிவாற்றவும், மூன்றும் நாள், திருவாசகம், திரு. K M. பாலசுப்பிரமணியம் அவர்கள் B. A., B. L., "மாலறநேயம் மலிந்தவிர்வேடம்" என்பது பற்றி விரிவுரையாற்றவும், மூன்று நாட்களும் திருமுதுகுன்றம் தேவார ஆசிரியர் திரு T. S. ஞானப்பிரகாச தேசிகர் அவர்களும், பனசை, தேவார ஆசிரியர் திரு. பஞ்சநத தேசிகர் அவர்களும் பன்னிரு திருமுறைகளை ஓதவும், அரியிலூர் வித்துவான் திரு. கு. முருகேச முதலியார் அவர்கள் நன்றி கூறவும், விழா இனிது நிறைவெய்தியது. உள்ளூர் வெளியூர்களிலிருந்து மக்கள் திரளாக வந்து கேட்டு இன்புற்றனர்.

சங்க வெளியீடுகள்.

	ரூ.	அ.	பை.	அஞ்சல்.		
உபந்நியாசங்கள் (செலவாகிவிட்டது)						
அஞ்ஞானத்தின் வழக்கீடு ,,						
வேளிர் வரலாற்றின் ஆராய்ச்சி ,,						
உழைப்பால் உயர்ந்த ஒருவர் ,,						
தொல்காப்பியம்-சொல்லதிகாரம் தெய்வச்சிலையார் உரை ...	2	8	0	0	3	9
சிலப்பதிகாரம்-புகார் காண்டம் (மூலமும் குறிப்பும்) ...	0	6	0	0	0	9
நெல்லை வருக்கக் கோவை ...	0	1	0	0	0	0
சித்தாந்தாதி (உரையுடன்) ...	0	1	0	C	0	9
கரந்தைக் கட்டுரை (வெள்ளிவிழா வெளியீடு)	5	0	0	1	0	0
கரந்தைக் கட்டுரைக்கோவை ...	1	0	0	0	1	6
சுருதிவீணை ...	0	4	0	0	0	6
கல்வி பயிற்சிக்குரியது தாய்மொழி ...	0	1	0	0	0	9
தமிழரசி குறவஞ்சி ...	0	10	0	0	0	9
*நால்வர் நான்மணிமாலை ...	0	1	0	0	0	6
யாழ்நூல்—தாளுறை ...	15	0	0	1	0	0
துணியுறை ...	17	0	0	1	0	0

*சங்க வெளியீடுகளை வாங்குவோர்க்கு
ஒருபடி விலையின்றித் தரப்பெறும்

பிற வெளியீடுகள்.

கச்சிக் கலம்பகம் ...	0—8—0
அப்பர் புகழ்மாலை ...	0—4—0
சுந்தரர் புகழ்மாலை ...	0—4—0
சுந்தரமூர்த்தி நாடகம் ...	0—4—0
புலவராற்றுப்படை ...	0—4—0
திருவெம்பாவை ...	0—1—0
யவனமஞ்சரி ...	0—8—0
யாப்பருங்கலக்காரிகை மூலம்	0—3—0
The Golden Book of English Poetry—(Junior)	0—8—0
Do. (Senior)	1—0—0

அஞ்சற் செலவு வேறு

வேண்டுகோள்.

தமிழ்ப் பொழிலுக்குரிய வரி, முதலிய தொகைகளைப் பொருளாளர், கரந்தைத் தமிழ்ச் சங்கம், கருந்தட்டாங்குடி, P. O., தஞ்சாவூர் என்ற முகவரிக்கு அனுப்பியுதவ பொழிலுறுப்பினர்களை வேண்டுகின்றோம்.

குறிப்பு: இத்திங்கள் பொழிலிலிருந்து வெளிவரும் 'உள நூல்' என்னுங் கட்டுரை, திருவாரூர் உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் திரு. குஞ்சிதபாத தேசிகர் அவர்கள் இயற்றியதாகும். உரிமை நூலாசிரியருடையதே.